அனுப்புநர்

முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
இரணிப்பேட்டை.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர் - 9

ந.க.எண்: 800829 /அ2/2017 நாள்: 28.09.2018

அய்யா:

| | |
|---|---|
| பொருள் | தேசிய மக்கள் தொகை கல்வி – பள்ளிகளில் மக்கள் தொகை கல்வி தொடர்பான தேசிய அளவிலான பாத்திரமேற்று நடித்தல் (ROLE PLAY) போட்டி நடத்துதல் - சார்பு |
| பார்வை | சென்னை- 6,மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 2787 /ஈ1 / 2018நாள்: 23.08.2018 |

****

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு உதவிபெறும் பள்ளிகள் /மாநகராட்சி/நகராட்சி பள்ளிகள் நீங்கலாக) 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மக்கள் தொகை கல்வி தொடர்பான தேசியஅளவிலான பாத்திரமேற்று நடித்தல் (ROLEPLAY) போட்டியினை நடத்த கீழ்கண்ட அட்டவணைப்படி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**போட்டிக்கான கால அட்டவணை**

| வ.எண் | போட்டிகள் | நாள் | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | பள்ளி அளவில் | 03.09.2018 | சம்பந்தப்பட்ட பள்ளி |
| 2. | கல்வி மாவட்ட அளவில் | 04.09.2018 (06) | திருப்பத்தூர் கல்வி மாவட்டம் - அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, திருப்பத்தூர் |
| | | | வேலூர் கல்வி மாவட்டம் - வெங்கடேஸ்வரா ஆண்கள் மேனிலைப் பள்ளி, வேலூர் |
| | | | இராணிப்பேட்டை கல்வி மாவட்டம் - ஆண்கள் மேனிலைப் பள்ளி, வாலாஜா |
| | | 05.09.2018 (04) | வாணியம்பாடி கல்வி மாவட்டம் - இந்து ஆண்கள் மேனிலைப் பள்ளி, ஆம்பூர் |
| | | | அரக்கோணம் கல்வி மாவட்டம் - ஆண்கள் மேனிலைப் பள்ளி, காவேரிப்பாக்கம் |
| 3. | மாவட்ட அளவில் | 07.09.2018 | முஸ்லிம் மேனிலைப்பள்ளி, வேலூர் |
| 4. | மாநில அளவில் | 27.09.2018 | கோவை |
| 5. | தேசிய மற்றும் தென்மண்டல அளவில் | தேதி மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் | |

இப்போட்டியினை அனைத்து அரசுப் பள்ளி மாணவர்களும் பங்கேற்க ஊக்கப்படுத்தியும், போட்டியினை சிறப்பாக நடத்தும் படியும் அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தி ஆவண செய்யுமாறு கனிவுடன் கேட்டுகொள்கிறேன்.

இப்போட்டிகள் சார்நது ஏற்படும் சந்தேகங்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.அ.சிவக்குமார் விரிவுரையாளர் 9786186144 அவர்களை தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

for முதல்வர் 28.8.18
மாவட்ட ஆசிரியர் கல்விமற்றும் பயிற்சிநிறுவனம்
இராணிப்பேட்டை

PRINCIPAL
District Institute of Education and Training
RANIPET-632 402
Vellore District.

இணைப்பு:

1. தேசிய மக்கள் தொகை கல்வி தொடர்பான தேசிய அளவிலான பாத்திரமேற்று நடித்தல் போட்டிக்கான மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள்,
சென்னை-600 0006.
ந. க. எண். 2787/ ஈ1 / 2018, நாள் 23 .08.2018

---------

பொருள் : மக்கள் தொகை கல்வி தொடர்பான தேசிய அளவிலான பாத்திரமேற்று நடித்தல் போட்டி (Role Play) நடத்துதல் – தொடர்பாக.

... ... ...

சென்னை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுடெல்லியிலுள்ள தேசியக் கல்வியியல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் (NCERT) இணைந்து அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு மக்கள் தொகைக் கல்வி தொடர்பான தேசிய அளவிலான பங்கேற்று நடித்தல் (Role play) போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது. இப்போட்டிகளை நடத்துவது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்கண்டவாறு.

போட்டிகளைச் செவ்வனே நடத்த, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருடன் போட்டி நடத்துதல் சார்ந்து விரிவாகக் கலந்துரையாடி, தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதன்மைக் கல்வி அலுவலரைத் தொடர்பு கொண்டு, ஒவ்வொரு பள்ளியிலும் இப்போட்டியினை நடத்த உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒவ்வொரு அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும் (அரசு உதவி பெறும் பள்ளிகள் / நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகள் நீங்கலாக) இப்போட்டி நடத்தப்பட வேண்டும். இப்போட்டிக்கான பத்து சூழ்நிலைகள் (Situations), மற்றும் பாத்திர விளக்கம் ஆகியவை இணைப்பு 2–ல் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, அந்தந்தப் பள்ளி ஆசிரியர்களின் உதவியுடன் அச்சூழ்நிலைக்கான உரையாடலைத் தயார் செய்ய வேண்டும். சூழ்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ, குறைக்கவோ கூடாது. மேலும், பங்கேற்று நடித்தலுக்கான பயிற்சியினை, பள்ளிகளில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். **மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு, இயக்குநரின் இந்த செயல்முறைகள் ஒவ்வொரு பள்ளிக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு (Forward) அறிவுறுத்தப்படுகிறது.**

இப்போட்டி, பள்ளி அளவில், கல்வி மாவட்ட அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில் என நான்கு கட்டங்களாக நடைபெறும். பள்ளி அளவில் அனைத்து மாணவ, மாணவிகளின் முன்னிலையில் இப்போட்டி நடத்தப்பட வேண்டும்.

பள்ளி அளவில் முதல் இடம் பெறும் குழு, கல்வி மாவட்ட அளவிலும், கல்வி மாவட்ட அளவில் முதல் 3 இடம் பெறும் பள்ளிகள் மாவட்ட அளவிலும், மாவட்ட அளவில் முதலிடம் பெறும் பள்ளி, மாநில அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும். மாநில அளவில் முதலிடம் பெறும் பள்ளி NCERT நடத்தும் தேசிய / தென்மண்டல அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும்.

கல்வி மாவட்ட, மாவட்ட, மாநில மற்றும் தேசிய / தென்மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவர்களை போட்டி நடைபெறும் மையத்திற்கு அழைத்து வர ஆசிரியர்/ ஆசிரியை ஒருவர் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும். கல்வி மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பயணச் செலவினை அந்தந்த பள்ளி நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறார்கள். மாவட்ட அளவிலான போட்டிக்களுக்கான நடுவர்களை அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன

முதல்வர்கள் தெரிவு செய்து, போட்டி நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை கவனிக்க முதல்வர்கள் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

இப்போட்டியில் பங்கு பெறும் மாணவ மாணவிகள் 6–8 நிமிடம் கால அளவிற்குள், தங்கள் பங்கேற்று நடித்தலை நடத்தி முடிக்க வேண்டும்.

போட்டிகளுக்கான கால அட்டவணை

| போட்டிகள் | நாள் | இடம் |
|---|---|---|
| பள்ளி அளவு | 03.09.2018 | அந்தந்த பள்ளிகள் |
| கல்வி மாவட்ட அளவு | 04, 05.09.2018 | அந்தந்த கல்வி மாவட்டத்திலுள்ள ஒரு பள்ளி |
| மாவட்ட அளவு | 07.09.2018 | அந்தந்த மாவட்ட தலைநகரிலுள்ள ஒரு பள்ளி அல்லது மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் |
| மாநில அளவு | 27.09.2018 | Coimbatore |
| தேசிய / தென்மண்டல அளவு | பின்னர் அறிவிக்கப்படும் | |

போட்டிகளை மதிப்பீடு செய்யும் நடுவர்கள் நியமனம்

| போட்டி | நடுவர்கள் |
|---|---|
| பள்ளி | 1. அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்<br>2. இரண்டு ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி) |
| கல்வி மாவட்டம் மற்றும் மாவட்டம் | 1. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்<br>2. பள்ளித் தலைமையாசிரியர் (போட்டியில் பங்கேற்காத பள்ளியிலிருந்து)<br>3. நடிப்பு போன்ற கலைகளில் அனுபவம் மிக்கவர் |
| மாநிலம் | 1. மக்கள் தொகை கல்வி வல்லுநர்<br>2. கல்வியாளர்<br>3. நடிப்பு போன்ற கலைகளில் அனுபவம் மிக்கவர் |

பங்கேற்று நடித்தல் போட்டியின் உட்கூறுகளின் மதிப்பெண் பங்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | உட்கூறுகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | சூழ்நிலையை சரியாக பயன்படுத்துதல் (Coverage of situations) | 25 |
| 2. | பங்கேற்று நடித்தல் (Presentation of Role Play) | 25 |
| 3. | பங்கேற்று நடித்தலின்போது வாழ்வியல் திறன்களின் வெளிப்பாடு (Reflection of Life Skills during Role play) | 40 |
| 4. | பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு இடையே ஏற்படும் கருத்து பரிமாற்றம் | 10 |
| | மொத்தம் | 100 |

பரிசு விவரம்

| அளவு | வெற்றி பெறும் மாணவர்கள் | பரிசு, சான்றிதழ் விவரம் |
|---|---|---|
| கல்வி மாவட்டம் | முதல் / இரண்டாம் / மூன்றாம் பரிசு | சான்றிதழ்கள் |
| மாவட்டம் | முதல் / இரண்டாம் / மூன்றாம் பரிசு (குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும்) | பங்கேற்பு சான்றிதழ்கள் / முதல் பரிசு ரூ. 300/– இரண்டாம் பரிசு ரூ. 200/–, மூன்றாம் பரிசு ரூ.150/– மற்றும் சான்றிதழ்கள் |
| மாநிலம் | முதல் / இரண்டாம் / மூன்றாம் பரிசு (குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும்) | பங்கேற்பு சான்றிதழ்கள் / முதல் பரிசு ரூ. 500/– இரண்டாம் பரிசு ரூ. 300/–, மூன்றாம் பரிசு ரூ. 200/– மற்றும் சான்றிதழ்கள் |
| தென்மண்டல அளவு | முதல் / இரண்டாம் / மூன்றாம் பரிசு (குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும்) | பங்கேற்பு சான்றிதழ்கள் / முதல் பரிசு ரூ. 800/– இரண்டாம் பரிசு ரூ. 500/–, மூன்றாம் பரிசு ரூ. 300/– மற்றும் சான்றிதழ்கள் |
| தேசிய அளவு | முதல் / இரண்டாம் / மூன்றாம் பரிசு (குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவருக்கும்) | பங்கேற்பு சான்றிதழ்கள் / முதல் பரிசு ரூ. 1000/– இரண்டாம் பரிசு ரூ. 700/–, மூன்றாம் பரிசு ரூ. 500/– மற்றும் சான்றிதழ்கள் |

கல்வி மாவட்ட அளவில் போட்டியில் பங்கு பெறும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களை தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொண்டு, தங்கள் பள்ளி போட்டியில் பங்கேற்கும் என்ற தகவலை போட்டி நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே அளித்தல் வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் சிறப்பு உடைகள் அல்லது அலங்காரம் ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்த்து, தங்கள் பள்ளிச் சீருடையிலேயே பங்கேற்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஒரு முதுநிலை விரிவுரையாளரை/ விரிவுரையாளரை இப்போட்டிக்கு பொறுப்பாளராக நியமித்து, போட்டிகளை ஒருங்கிணைத்தல், சான்றிதழ்களைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்துமாறு முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்போட்டி தொடர்பான செலவினங்களை முதல்வர்களுக்கு அனுப்பப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ள வேண்டும் (இணைப்பு–1).

இச்செலவினத்தை மேற்கொண்டு, அதற்கான இரசீதுகளையும், மீதமுள்ள தொகையையும் இயக்குநர் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் அவர்களுக்கு போட்டி நடத்தி முடித்த உடன் அனுப்பி வைக்கும் படி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற அணியின் விவரத்தினை 07.09.2018 அன்றே மாநில அளவில் போட்டியினை நடத்தும் முதல்வருக்குக் கீழ்க்கண்ட அட்டவணையினை ஆங்கிலத்தில் தயார் செய்து மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| Name of the School | Name of the Escort Teacher with Mobile No. | Names of Students |
|---|---|---|
| | | 1 |
| | | 2 |
| | | 3 |
| | | 4 |
| | | 5 |

இப்போட்டியினை சிறப்பாக நடத்தி முடிக்குமாறு அனைத்து முதல்வர்களும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆசிரியர்கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள்
2. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6 – மேல்நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

## இணைப்பு : 2

பொருள் : 1 வளரிளம் பருவத்தினரிடையேயுள்ள ஆரோக்கிமான உறவு

### சூழ்நிலை 1.1

பதினான்கு வயதான ஒரு பெண்குழந்தை 9 ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு வெகு விரைவில் திருமணம் செய்துவிட வேண்டுமென்று அவளின் பெற்றோர் விரும்புகின்றனர். அவர்களின் உரையாடலைக் கேட்டவுடன் அவள் மனவருத்தம் அடைகிறாள். அவள் தனது பிரச்சினையைத் தனது தோழியிடம் பகிர்ந்துகொள்கிறாள். அவர்கள் இருவரும் தங்களின் ஆசிரியையிடம் சென்று, இந்த இளம் வயதில் திருமணம் செய்யும் முடிவைக் கைவிட அப்பெண்ணின் பெற்றோரை வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

பாத்திரங்கள்:

முதல் மாணவி: 14 வயதுடைய புத்திக்கூர்மையான நன்றாகப் படிக்க விரும்பும் ஒரு பெண்குழந்தை அவள் பிற்காலத்தில் ஆசிரியராக விரும்புகிறாள்.

பெற்றோர்(தாய் மற்றும் தந்தை):- தங்கள் மகளின் திருமணத்தைப்பற்றி வெகு விரைவாக நடத்தி முடிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

இரண்டாம் மாணவி:இவள் முதல் மாணவியின் தோழி. இவளிடம் தமது பிரச்சினையை முதல் மாணவி பகிர்ந்துகொள்கிறாள்.

ஆசிரியை: பெண்ணின் சரியான திருமண வயது பற்றியும் இளம்வயதில் திருமணம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் பெற்றோர்களிடம் எடுத்துக்கூறி, தங்கள் மகளுக்கு இந்த இளம் வயதில் திருமணம் செய்யவேண்டாம் என வலியுறுத்திக் கூறுகிறார்.

### சூழ்நிலை 1. 2

பத்தாம் வகுப்பில் படித்தவரும் ஒரு பெண்குழந்தைக்கு 16 வயதாகிறது. அவருக்குத் திருமணமான ஒரு அண்ணன் இருக்கிறார். அவளின் அண்ணி கருவுற்றிருப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறாள். அவளின் தாயார் தனக்குப் பேரன் மட்டுமே பிறக்க வேண்டும் என்று விரும்புகிறார். தாயாரின் வற்புறுத்தலின் காரணமாகத் தனது மனைவியைக் கருவிலிருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று அறிந்து வருமாறு கேட்கிறார். இதன் காரணமாக மாமியார் மற்றும் மருமகளிடையே வாக்குவாதம் ஏற்படுகிறது. இதனால் பிற்காலத்தில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று அந்த மாணவி சிந்திக்கிறாள். அவள் அருகாமையில் வசித்து வரும் ஒரு மருந்துவரை அழைத்து வந்து தனது தாய்க்கும் அண்ணனுக்கும் அறிவுரை கூறச் செய்கிறாள்.

பாத்திரங்கள்

வளரிளம் பருவ மாணவி:ஆண் பெண் பாலின விகிதம், ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கிடையே இருக்க வேண்டிய சமத்துவம், ஆண்களின் பொறுப்புகள் போன்றவை பற்றி நன்கு அறிந்திருக்கிறான்.

மருமகன்: இவர் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் சமமானவர்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார். கருவிலிருக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அதனைப் பெற்றெடுத்து, நன்றாக வளர்க்க வேண்டும் என்று இவர் விரும்புகிறார்.

அண்ணன்:ஆண் குழந்தை மட்டுமே வேண்டுமென்று சமுதாயத்தில் நிலவும் கருத்தினாலும், தாயாரின் வற்புறுத்தலினாலும், தனக்கு ஆண் குழந்தை மட்டுமே பிறக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

தாய்: தனது குடும்பத்தில் அடுத்து ஆண் குழந்தை மட்டுமே பிறக்க வேண்டும் என்றும் கருவில் இருப்பது பெண் குழந்தையாக இருந்தால், அதனை அழித்துவிடுமாறும் இவர் தமது மகனை வற்புறுத்துகிறார்.

மருத்துவர்: குழந்தையின் பால் நிர்ணயத்தால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறி, மகனையும், தாயையும் மனமாற்றம் அடையச் செய்கிறார்.

## பொருள்–2: வளரிளம் பருவத்தின் அழகும் சவால்களும்

<u>சூழ்நிலை 2.1</u>

மூன்று நண்பர்கள் பதினொன்றாம் வகுப்பில் படிக்கின்றனர். அவர்களில் ஒருவன் 10–ஆம் வகுப்பில் பயிலும் ஒரு மாணவியின் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறான். இவர்கள் இருவரும் நண்பர்களாவர். மற்ற இரு மாணவர்கள், அந்த மாணவி பள்ளி முடிந்து வீடு திரும்பும் போது, அவளை வழிமறித்து கிண்டல் செய்கின்றனர். இதனால், அவள் மிகவும் வருத்தமடைகிறாள். தனது தோழியிடம் இந்த பிரச்சினையை எடுத்துக் கூறுகிறாள். தனது தோழியின் வீட்டிற்கு அருகில் வசிக்கும், நண்பனிடம் இந்த பிரச்சினையை எடுத்துக் கூறும்படி அறிவுறுத்துகிறாள்.

**1. முதல் மாணவன்:**

இவன் பதினொன்றாம் வகுப்பு பயிலும் நல்ல நடத்தையுடைய மாணவன். இவனின் வீட்டிற்கு அருகில் ஒரு மாணவி வசித்து வருகிறாள். இவள் தனது பிரச்சினையை இவனுடன் விவாதிக்கிறாள்.

**2.3. இரண்டு மாணவர்கள்:**

இவர்கள் முதல் மாணவனின் நண்பர்கள். இவர்கள் தினமும், ஒரு மாணவியை கிண்டல் செய்கின்றனர்.

**4. முதல் மாணவி:**

பத்தாம் வகுப்பு பயிலும் இவள், இரண்டு மாணவர்கள் கிண்டல் செய்வதால், மிகவும் வருத்தமடைகிறாள்.

**5. இரண்டாம் மாணவி:**

இவள் முதல் மாணவியின் தோழியாவாள். இவள் தனது தோழியிடம், அந்த மாணவனை சந்தித்து, அவனின் நண்பர்களின் நடத்தையைப் பற்றியும், அவர்கள் செய்யும் கிண்டலை நிறுத்தும்படிக் கூறுமாறும் அறிவுறுத்துகிறாள்.

**<u>சூழ்நிலை 2.2</u>**

ஒரு வளரிளம் பருவ மாணவனும் மாணவியும் அருகருகே வசித்து வருகின்றனர். அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். அந்த மாணவன், அம்மாணவியின் நட்பை காதல் என்று தவறாக கற்பனை செய்கிறான். இதுபற்றி அந்த மாணவிக்கு ஒன்றும் தெரியாது. ஒருநாள் அவன் அவளுக்கு ஒரு காதல் பரிசினை வழங்குகிறான். அவனின் நடத்தையினால் மனவருத்தம் அடைந்து, அவனுடன் உள்ள நட்பையே முறித்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாள். தனது இரண்டு நண்பர்களுடன் இதுபற்றி விவாதிக்கிறாள். ஒரு தோழி, இவளின் நட்பை முறித்துக் கொள்ள வேண்டாம் எனக் கூறுகிறாள். மற்ற இருவர் (ஒரு மாணவன், ஒரு மாணவி), நட்புறவு முறையில் உள்ள கடமைகளைப் பற்றி எடுத்துக் கூறுகின்றனர்.

பாத்திரங்கள்:

1. முதல் மாணவி:

16 வயதுடைய வளரிளம் பருவப் பெண். இவள் ஒரு வளரிளம் பருவ மாணவனின் வீட்டிற்கு அருகில் வாழ்கிறாள். இவள் எளிய முறையில் வாழும் மாணவி.

2. முதல் மாணவன்:

இவன் 16 வயதுடைய மாணவன். முதல் மாணவிக்கு காதல் பரிசு ஒன்றினை அனுப்புகிறான்.

3. இரண்டாம் மாணவி:

இவள் பள்ளியில் நடத்தப்பட்ட ஒத்த வயதினருக்கான வளரிளம் பருவக்கல்வியில் பங்கேற்றவள். முதல் மாணவியின் தோழி. இனக்கவர்ச்சி, காதல், ஈர்ப்பு போன்றவற்றைப் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடுகிறாள்.

4. மூன்றாம் மாணவி:

இவள் முதல் மாணவியின் தோழி. இவள் சரியான மனநிலை இல்லாதவள். இவள், முதல் மாணவியை அந்த மாணவனுடன் காதலில் ஈடுபடுமாறு வற்புறுத்துகிறாள்.

5. இரண்டாம் மாணவன்:

இவன் நட்பு மற்றும் காதல் ஆகியவற்றிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை எடுத்துரைத்து, நல்ல முறையான நடத்தையின் முக்கியத்துவத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துக் கூறுகிறான்.

பொருள்–3: HIV / AIDS: பாதிக்கப்பட்டுள்ளோரை ஒதுக்குதல் மற்றும் வளரிளம் பருவத்தினரை பாதிக்கும் சூழல்

**<u>சூழ்நிலை:3.1</u>**

ஒரு பொதுத்துறை நிறுவனத்திற்கு அழைக்கப்பட்ட பார்வையாளர் ஒருவர், அந்நிறுவனத்தின் மிகவும் மூத்த அதிகாரி ஒருவரின் மகள், பள்ளியிலிருந்து நீக்கப்பட்டாள் என்பதை அறிகிறார். அதற்கான காரணம், அவளின் பெற்றோர்கள் HIV Positive ஆவர். சமீபத்தில் அவளது தாயாரிற்கு ஏற்பட்ட உடல்நிலைக் குறைவின் போது நடத்தப்பட்ட, இரத்தப் பரிசோதனையில், அவர் HIV கிருமியால் பாதிக்கப்பட்டவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவள் தந்தையாருக்கு நடத்தப்பட்ட சோதனையிலும், அவர் HIV Positive என்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்செய்தியினைத் தெரிந்து கொண்ட பள்ளி நிர்வாகம், அவர்களின் மகளைப் பள்ளியிலிருந்து நீக்கியது. அப்பள்ளியின் முதல்வர், அம்மாணவியின் பெற்றோர்களின் தவறான நடத்தையினாலேயே, அவர்களுக்கு HIV தொற்று ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறார். அம்மாணவி இப்பள்ளியில் தொடர்ந்து படித்தால், அது, அப்பள்ளியின் சூழ்நிலையில், எதிர்மறை விளைவினை ஏற்படுத்தும் என்பதாலே, அம்மாணவியைப் பள்ளியை விட்டு நீக்கியதாக, அப்பள்ளி நிர்வாகம் கூறுகிறது. ஆனால், சமீபத்தில் நடத்தப்பட்ட அறுவை சிகிச்சையின் போது, அம்மாணவியின் தாயாருக்கு ஏற்றப்பட்ட பரிசோதிக்கப்படாத இரத்தத்தினாலேயே, அவருக்கு HIV பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பாத்திரங்கள்

1. கணவர்: HIV கிருமியினால் பாதிக்கப்பட்டவர் இவர். இவர், மிகவும் எதிர்மறையான மனநிலையுடன் இருப்பதுடன், தன்னுடன் பணிபுரிபவர்கள் மற்றும் தன் மகளின் பள்ளி நிர்வாகம் ஆகியோரின் மனிதத்தன்மையற்ற நடத்தையினால், தனக்கு ஏற்பட்ட கவலையை, பார்வையாளரிடம் தெரிவிக்கிறார்.

2. பார்வையாளர்:

நிறுவனத்திற்கு பார்வையாளராக வரும் இவர், அந்த தம்பதியினர் எவ்வாறு HIV தொற்று பெற்றனர் என்பது குறித்து, உரையாடல் நடத்துகிறார். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட தம்பதியினருக்கு, மன ஆறுதல் அளிக்க முயல்கிறார். பள்ளி முதல்வருடன் பேச்சு வார்த்தை நடத்தி, பள்ளியிலிருந்து நீக்கப்பட்ட மாணவியை மீண்டும் பள்ளியில் சேர்க்க, பள்ளி நிர்வாகத்தை சம்மதிக்கச் செய்கிறார்.

3. மனைவி: இவர் தன் கணவனுடன் பணிபுரிபவர்கள் மற்றும் அவள் வீட்டின் அருகில் குடியிருப்போர், தன்னை தவறான நடத்தை உடையவள் என்று கூறுவதைக் கேட்டு, மிகவும் மனமுடைந்து காணப்படுகிறார். சமீபத்தில் நடந்த, அறுவை சிகிச்சையின் போது அளிக்கப்பட்ட பரிசோதிக்கப்படாத இரத்தத்தினாலேயே, தனக்கு HIV கிருமிகளால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை விளக்குகிறார். ஆனால், அவள் வீட்டிற்கு அருகில் வசிப்பவர்களும், மற்றவர்களும் வேறு விதமாக நினைக்கிறார்கள். இவர், தன் மகளுக்கு ஏற்பட்ட நிலை குறித்து, மிகவும் கவலை அடைந்துள்ளார்.

4. மகள்: எட்டாம் வகுப்பு படிக்கும் இவள், மிகவும் மனமுடைந்து காணப்படுகிறாள். தன் பெற்றோர்களுக்கு ஏன் HIV பாதிப்பு ஏற்பட்டது என்றும், தனக்கு HIV கிருமி தொற்று ஏற்படாமல் இருந்தபோதிலும், தன்னை ஏன் பள்ளியிலிருந்து நீக்கினார்கள் என்பது குறித்தும், பார்வையாளரிடம் கேட்கிறாள். HIV தொற்றினால் பாதிப்பு பெற்றவர்கள் அன்பு, ஆதரவு மற்றும் மருத்துவ உதவி கிடைக்கப்பெற்றால், அவர்கள் மற்றவர்களைப் போல, நலமான வாழ்வை மேற்கொள்ளலாம். மேலும் HIV தொற்றினைக் கொண்டவர்களும் மற்றவர்களைப் போல, மனிதர்களே என்றும் தகவல்கள் தரப்பட்டிருந்த புத்தகத்தினை, இவள் படித்திருக்கிறாள்.

5. பள்ளி முதல்வர்: இவர், ஒரு மாணவியை பள்ளியை விட்டு நீக்கியதை எதிர்த்த மற்ற மாணவர்களின் பெற்றோர்களிடம், தன் நடவடிக்கையை நியாயப்படுத்திக் கூறுகிறார். ஆனால் அவர் எடுத்த தவறான நடவடிக்கையை விமர்சிக்கக் கூறியவுடன், அவர் அதனை உணர்ந்து, அம்மாணவியை பள்ளியில் மீண்டும் சேர்த்துக் கொள்கிறார்.

<u>சூழ்நிலை:3.2</u>

ஒரு 14 வயது மாணவன் தனது குடும்பத்தில் நிலவும் புரிந்துகொள்ள முடியாத மிகப்பெரிய பிரச்சினையினால் வருத்தமடைகிறான். அவர்கள் பெற்றோர்களுக்கிடையில் அடிக்கடி சண்டை ஏற்படுவதுடன், அவர்கள் HIV பற்றி அவர்கள் விவாதிக்கின்றனர். அவர்களுள் ஒருவருக்கு HIV தொற்று இருக்கலாம் என கருதுகிறான். தனது பிரச்சினையினை தனது ஆசிரியருடன் கலந்து ஆலோசிக்க விரும்புகிறான்.

பாத்திரங்கள்:

1. மாணவன்: 14 வயதுள்ள மாணவன் தனது குடும்பத்தைப் பற்றி மிகவும் அக்கறையுள்ளவன். தனது பெற்றோர்கள் அடிக்கடி சண்டை போடுவதாலும் அவர்கள் சண்டைக்கான காரணத்தை தன்னிடம் கூறாததாலும் மிகவும் வருத்தமடைகிறான். இதுகுறித்து தனது ஆசிரியரின் அறிவுரையைகேட்க முடிவு செய்கிறான்.

2.3. பெற்றோர் (தாய் மற்றும் தந்தை): இவர்களில் ஒருவர் HIV –யால் பாதிக்கப்பட்டுள்ளதால், இவர்களுக்கிடையே அடிக்கடி சண்டை ஏற்படுகிறது.

4. ஆசிரியர் (ஆண்): மாணவர்கள் இவரை அடிக்கடி அன்புடன் அணுகுகின்றனர். அதனால் இவரை மாணவர்களுக்கு மிகவும் பிடிக்கும். தனது மாணவனின் பிரச்சினையினைக் கேட்டு, அவனுக்கு உதவும் வகையில், அம்மாணவனின் பெற்றோரை சந்தித்து, HIV –யினால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து கலந்துரையாடுகிறார்.

**சூழ்நிலை 3.3:**

ஒரு இளம் நிறுவனப் பணியாளர் தனது தாயாருடன் வாழ்ந்து வருகிறார். அவருக்கு பணி நிமித்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையின் போது அவருக்கு HIV தொற்று உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவர் இவரின் நிலையை இரகசியமாக யாரிடமும் கூறாமல் இருக்கிறார். ஆனால், அவர் பணிபுரியும் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், அவரை பணிநீக்கம் செய்கிறார். அவரின் தாயார் தன் மகனுக்கு விரைவில் திருமணம் முடிக்க வேண்டும் என்று நினைக்கிறார். அவருடன் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணை திருமணம் செய்து வைக்க வேண்டுமென, தாயார் நினைக்கிறார். தன் HIV நிலை குறித்து யாரிடமும் தெரிவிக்க வேண்டாம் என தன் மகனிடம் கூறுகிறார்.

பாத்திரங்கள்:

1. நிறுவனப் பணியாளர்: இவர் 25 வயதுடையவர். மருத்துவப் பரிசோதனையின் போது HIV தொற்று உள்ளது கண்டுபிடிக்கப்பட்டதால், இவர் தனது பணியை இழக்க வேண்டியிருந்தது. இதனால் மிகவும் மனமுடைந்து, சோகமாக உள்ளார்.

2. தாயார்:55 வயதுடைய முதியவர், தனது மகன் மீது மிகுந்த அக்கரை உடையவர். அவருடன் அடிக்கடி பேசிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணை தன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென விரும்புகிறார். தனது மகனின் HIV நிலை குறித்து யாரிடமும் தெரிவிக்க வேண்டாமென, தன் மகனிடம் கூறுகிறார்.

3. நிர்வாக இயக்குநர்: இவர் மிகவும் திறமையான 45 வயதுடையவர். தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவருக்கு HIV உள்ளது எனத் தெரிந்தவுடன், யாரிடமும் இது குறித்து கலந்தாலோசிக்காமலும் யாருடைய அனுமதியும் பெறாமலும், அவரை பணிநீக்கம் செய்கிறார்.

4. பெண்:23 வயதுடைய பெண் இவள் மிகவும் நல்லவள். அவரின் நோய் / நிலை பற்றி பெரிதாகக் கருதாமல், அவரை மணக்க விரும்புகிறார்.

பொருள்: 4 போதைப் பழக்கத்தின் காரணமும், விளைவும்

சூழ்நிலை 4.1:

நான்கு நண்பர்கள், இன்பச் சுற்றுலா சென்றுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒன்றாக மது அருந்த நினைக்கின்றனர். அப்போது ஒருவர் மது அருந்தலாமா, வேண்டாமா என்று குழப்பத்தில் இருந்தார். தான் மது அருந்தவில்லையெனில், தனது நண்பர்கள் தன்னை வெறுப்பார்கள் என நினைக்கிறான். மேலும் இது நட்பையும் பாதிக்கும் என நினைக்கிறான். ஆனால், தனது குடும்பத்தில், ஒருவரும் மது அருந்துவது கிடையாது என்பதையும் உணர்கிறான். மேலும், இவன் மது அருந்துவதால் ஏற்படும் உடல்நலக் கேட்டினையும் நன்கு தெரிந்துள்ளான்.

பாத்திரங்கள்:

*1. முதல் மாணவன்:* வளரிளம் பருவ வயதுடைய இவன், தனது நண்பர்களுடன் வெளியில் இன்பச் சுற்றுலா செல்கிறான். அனைவரையும் இன்பமாக மது அருந்த அழைக்கிறான்.

*2. இரண்டாம் மாணவன்:* தான் மது அருந்த மாட்டேன் என முதல் மாணவனிடம் கூறுகிறான். ஆனால், முதல் மாணவன், இவனிடம், தாங்கள் இங்கு மது அருந்துவது, நமது வீட்டிற்கு அருகில் உள்ள யாருக்கும் தெரியாது எனவும், தாங்கள் வேகமாக வளர்ந்து வரும் வாலிபர்கள் எனவும் கூறி மது அருந்த வற்புறுத்துகிறான்.

*3. மூன்றாம் மாணவன்:* இவன் முதல் மற்றும் இரண்டாம் மாணவனின் நண்பன், இவன் எப்போதும் முதல் மாணவனை ஆதரிப்பான். இவனும், முதல் மாணவனுடன் இணைந்து, இரண்டாம் மாணவனை மது அருந்துமாறு வற்புறுத்துகிறான்.

*4. நான்காம் மாணவன்:* இவன் முதல் மற்றும் மூன்றாம் மாணவனின் நண்பன். முதல் மாணவன் மது அருந்தலாம் எனக் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைகிறான். மது உட்கொள்ளக் கூடாது என்று வாக்குவாதம் செய்து மதுவை தவிர்க்கிறான். இவனுக்கு மது

உடலுக்கும் உடல் நலத்திற்கும் கேடு என்பது நன்றாக தெரியும். எனவே, அனைவரையும் மது அருந்த வேண்டாம் என வலியுறுத்துகிறான்.

**5. தாயார்:** இவர் இரண்டாம் மாணவனின் தாயார். தன் மகனிடம் மிகவும் நட்பாகப் பழகக் கூடியவர். தன் தாயாரின் நடத்தையும் மனநிலையும், இரண்டாம் மாணவனின் மனதில் வந்தவுடன், அவன் தனது குழப்பத்திலிருந்து விடுபடுகிறான்.

**சூழ்நிலை 4.2**

ஒருநாள் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் சளி மற்றும் இருமல் நோயால் அவதிப்பட்ட போது, இருமல் மருந்தினை உட்கொள்ளும்படி மருத்துவர் அறிவுறுத்தினார். இவன் உடல்நிலை சரியில்லாத போது, அவனை சந்திக்க மூன்று நண்பர்கள் அவனது அறைக்கு அடிக்கடி வந்தனர். அந்த நண்பர்களில் ஒருவனுக்கு அந்த இருமல் மருந்தினை சுவைத்துப் பார்த்து, அச்சுவை பிடித்ததினால், தொடர்ந்து அதனை உட்கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அதனால் அவனே மருந்துக் கடைக்காரரிடம் நேரடியாகச் சென்று மருந்தினைப் பெற்று, அப்பழக்கத்திற்கு அடிமையாகிறான். மற்ற நண்பர்கள் அவனது அறைக்கு வந்துப் பார்த்தபோது, பல இருமல் மருந்து பாட்டில்கள் கிடந்ததைக் கண்டு வருத்தமடைகின்றனர். அவர்கள் அனைவரும் அவனை ஆலோகரிடம் அழைத்து செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தனர்.

பாத்திரங்கள்:

*1. முதல் நண்பன்:* இவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன். இவன் சளி மற்றும் இருமல் நோயினால் அவதிப்பட்ட போது, மருத்துவரின் ஆலோசனைப்படி, இருமல் மருந்தினை உட்கொள்கிறான். அவனின் மூன்று நண்பர்கள் அவனது அறைக்கு வருகின்றனர்.

*2. இரண்டாவது நண்பன்:* இருமல் மருந்தினை சுவைத்து, அச்சுவை பிடித்ததினால், மருந்துக் கடைக்காரரிடம் நேரடியாகச் சென்று இருமல் மருந்து பாட்டில்களைப் பெற்று, அதனை தொடர்ந்து உட்கொள்கிறான். அதனால் அதற்கு அடிமையாகிறான்.

*3.4. மூன்றாம் மற்றும் நான்காம் நண்பர்கள்:* இரண்டாவது நண்பனைக் காண, அவனது அறைக்குச் சென்று, பல மருந்து பாட்டில்கள், அறையில் கிடந்ததைக் கண்டு வருத்தமடைகின்றனர். அவனை ஆலோசகரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்று முடிவெடுத்தனர்.

5. ஆலோசகர்: இவர் போதைக்கு அடிமையாதலின் விளைவுகளை எடுத்துக் கூறி, அவனை அந்த பழக்கத்திலிருந்து விடுபட உதவி செய்தார்.

**சூழ்நிலை 4.3**

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு வளரிளம் பருவ மாணவனின் கல்வி தேர்ச்சி, நாளுக்கு நாள் குறைந்து வருவதை அவனது ஆசிரியர் கண்டறிந்தார். அவனை அழைத்து, கல்வியில் தேக்கநிலைக்கான காரணத்தை கேட்டறிந்தார். அப்போது அம்மாணவன், தனது பெற்றோர்களிடம் தனக்கு இருக்கும் உறவுமுறைப் பற்றியும், குறிப்பாக அவனது தந்தை மீது தனக்கு இருக்கும் பயத்தைப் பற்றியும் ஆசிரியரிடம் தெரிவிக்கிறான். இந்த இருக்கமான சூழ்நிலை வீட்டில் நிலவுவதால், இவன் முடிந்தவரை அதிக நேரம் வெளியிலே தனது காலத்தை கழிக்கிறான். அப்போது, சில நண்பர்களுடன் இணைந்து போதை ஊசி போட்டுக் கொள்ளும் பழக்கத்திற்கு அடிமையாகிறான்.

பாத்திரங்கள்:

*1. வளரிளம் பருவ மாணவன்:* இவன் மற்ற தீய நண்பர்களுடன் சேர்ந்து போதை ஊசி பழக்கத்திற்கு அடிமையாகிறான்.

*2. தந்தையார்:* இவர் மிகவும் கண்டிப்பானவர், மிகவும் கடுமையானவர், தனது மகனின் பிரச்சனைகள் பற்றி கவலை இல்லாமல் இருப்பவர்.

*3.4. இரண்டு நண்பர்கள்:* இவர்கள் இருவரும் போதை ஊசி போட்டுக் கொள்ளும் பழக்கம் உடையவர்கள். இவர்கள் மேலும், தனது நண்பனையும், ஊசி போட்டுக் கொள்ளும் படி தூண்டுகின்றனர்.

*5. ஆசிரியர்:* இவர், அனைத்து மாணவர்களும் அணுகும் விதத்தில் அன்பானவர். குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் சிறந்த உறவுமுறை, கலந்துரையாடல் வேண்டுமென்று, பெற்றோர்களிடம் வலியுறுத்திக் கூறுகிறார்.